Koviloor Digital Library 3-3

ஸ்ரீ தேவி சகாயம்

திருப்போரூர் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள்

அருளிய

ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா

(குகஸ்ரீ ரஸபதி அவர்கள் குறிப்புரையுடன்)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
Acc. No. 4224

காப்பிகள் கிடைக்குமிடம் :—

போன் ஆபீஸ் : 34631 வீடு : 81478

V. M. M. கெங்காதரம் செட்டியார் கம்பெனி,
23, தங்கசாலைத் தெரு, சென்னை-3.

விலை : [illegible]0 nP.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

தெய்வமே துணை

முன்னுரை

தமிழ் நாட்டில் ஒரு காசி. அதன் பெயர் அவிநாசி. சாந்தம் தரும் அப்பதியினர் திரு. சாந்தலிங்க ஸ்வாமிகள். நான்கு மறைகள் போல் அவர் நான்கு நூற்களை அருளினர். அவைகளுடன், மாபெரும் ஸ்ரீ குமாரதேவரை தம் மாணவராக்கி, நடமாடும் கோயிலாக நீ நாட்டில் இரு என்றார்.

நிஷ்டையில் பலகாலம் நிலைத்திருந்த தேவர், பழுத்த தம் அனுபவத்தைப் பதினன்கு சாத்திரங்களாகப் பாடினர். அவைகளைப் பார் முழுதும் ஓதுமாறு பரப்பினர். உலகிற்கு உபகரிக்க, தன்னைப்போல் ஒரு சத் பாத்திரத்தைத் தேடி, ஊர்கள் முழுதும் உலவினர்.

வெள்ளியம்பலம் எனும் மதுரைப் பதியில், உத்தமர் சிதம்பரர் என்று ஒருவர் இருந்தார். ஊனுட்சி செய்வார்க்கு வானுட்சி வழிகாட்டும் மீனுட்சி தாஸரான சிதம்பரர், குணஞ்சிறந்த ஒரு கவிக்குயில்.

அங்கயற்கண் அன்னே! தடாதகா தேவீ! அருள்க அம்பா என்று அநவரதமும் சிந்திப்பார். அகத்தும் புறத்தும் வந்திப்பார். அவரது அன்பிற்கு இரங்கிய அம்பிகை, நனவிலும் கனவிலும் அவர் முன் நடமாடலாயினள். ஒருநாள் புனித நெஞ்சுள் புகுந்து, அவர் வாக்கில் நோக்கை வைத்தாள்.

அந்நிலையில் சிதம்பர ஸ்வாமிகள் ஆன அவர் தம் திரு நாவில் இருந்து, குறிப்புப் பலகொண்ட ஒரு துதிநூல் குதித்

Koviloor Digital Library

துப் புறப்பட்டது. அம்பிகையின் அதிரகஸ்ய சேவை நுட்பங்கள், அதனில் ஆநந்த தாண்டவம் ஆடின.

உயிர்ப்பை உள்ளுக்கு வாங்கும் பொழுது, ஓம் எனும் இனிய ஒலியெழும். ஊன்றி அவ்வொலியை உணரும் சமயம், புனித ஒரு பொருள் புலனுகும். ஒளிமயமான அப் பொருளே உமாதேவி.

ஒன்பது கோணமிட்டு, உமையின் பீஜ எழுத்துக்களை அதனில் ஊன்ற வைத்து, சிந்தையிற் பதித்துச் சிந்திப் பார்க்கு ரீங் ரீங் என்ற நாதம் எழும்.

"ஓங்காரி யென்பாள் அவளொரு பெண்பிள்ளை
ரீங்காரி யாகி யினிதிருந் தாளே"

என்று திருமூலர், அரிய இந்த அனுபவத்தை அறிவிக்கிருர். அதைத் தம் அனுபவத்தில் அறிந்த ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகள்,

'ஓங்காரத்து உள்பொருளே! உற்றநவ கோணத்தில்
ரீங்காரந் தன்னில் இருப்பவளே!'

என்று பாடும் இருவரிகள், செவிவழி நுழைந்து சிந்தையிற் புகுந்து நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

முதன்மை விக்ரகம் மூர்த்தம் எனப்பெறும். முக் கோணம் மூர்த்தமானுல், அதனில் மூர்த்திகரிக்கிருள் அந்த முதல்வி. (மூர்த்தம்–திருமேனி; மூர்த்தி-உயிர்.)

ஆறு கோணத்தில் மகாசக்தி என்று அமர்கின்ருள். பதினறு கோணத்தில் தங்கிப் பதினறு பேறும் பாலிக்கிருள். நாற்பத்து முக்கோணத்தில் நாயகியாகி, நானில வளா கத்தை நடத்துகிருள். பளபள என்று அவள் மந்திர சக்கரம், பரம ஒளியை எங்கும் பரப்புகின்றது.

Koviloor Digital Library

எவருடைய வெள்ளை விழியும் சிவமாகும்; கருவிழி, தேவி நிறமாகக் காணப் பெறும். விழிமணியில் இருந்து விளையாடுகின்ற அந்த விமலை, பரம எமது ஆட்சியைப் புறத்தில் பார்! உள்முகமாகி, எம் அகமுக ஆட்சியை அறிந்து கொள் என்று சிறக்கப் போதனை செய்கின்றாள் என்கிறார். ஆஹா! என்ன அருமையான செய்திகள்!

'நாசி நுனியில் நடுவெழுந்த தீபமே' என்று சிதம்பரர் நவிலும் பொழுது, உத்தமர்கள் உணர்வு மூக்கு நுனியை நோக்கி முறுவலிக்கிறது.

ஆடலரசர் ஐந்தொழில் தாண்டவம் புரிய, அதற்கேற்ப தாளம் தவறாமல் தானும் ஆடுகிறாள் அத் தற்பரி.

விழிப்பு நிலையில் கண்முன் விளையாடுகின்றாள். ஜோதி மணி நிறமாகிச் சொப்பனத்தில் தோன்றுகிறாள். சுழுமுனையில் உறவாகிச் சுகத்தைத் தருகிறாள். 'துரியமதாய்ப் பின்னும் துரிய அதீதத்தில், அரிய சிலம்பொலியை' அறியுமாறு செய்கின்றாள்.

அன்னை ஆயினாள்; ஆளும் அரசி ஆயினாள் எமது பரை. அன்பொடு தன்னை எவரும் அறிந்துய்ய, உலகில் உள்ள குலங்கள் அனைத்திலும் உதயம் ஆகிறாள். ஊன்றி இவைகளை உணர்ந்து, அம்படைச்சி, ஆண்டிச்சி, இடைச்சி ஒட்டச்சி, சடைச்சி, செட்டிச்சி, சேணிச்சி, வலைச்சி, வேடிச்சி என்றெல்லாம் தூய இருபொருள் தோன்ற, அந்தப் பரம கல்யாணியைப் பாடுகின்றார் நம் பாவலர்.

ஓத நா இனிக்கும்; உணர உளம் உருகும்; சாதனையை அதன் வழியே சார்விக்கும். சால்புடைய உபநிடதம், ஸ்ரீ மீனாட்சி கலிவெண்பா எனும் இம் மேன்மை நூல்.

Koviloor Digital Library

தக்கவர் ஒருவர் வேண்டும் என்றுதேடியிருந்த ஸ்ரீகுமார தேவர், பாத்திரரான ஸ்ரீசிதம்பர ஸ்வாமிகளைப் பார்த்தார். சட்சு தீட்சையால் அவரைத் தம் வயமாக்கினார். தம் ஆசாரியரிடம் அழைத்துச் சென்றார்.

கண்ட சாந்தலிங்கர் மனம் களித்தது. தாம் அருளிய கொலைமறுத்தல், வைராக்ய சதகம், தீபம், அவிரோத உந்தியார் முதலிய நான்கு நூற்கட்கும், கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவில் ஒடுக்கத்திற்கும் சிதம்பர ஸ்வாமிகளை உரையெழுதப் பணித்தார்.

சிதம்பர ஸ்வாமிகள் அந்நூற்கட்கு எழுதிய பேருரை, அநுபூதிமான்கள் உணர்விற்கு அற்புத விருந்தாக அமைந்தது.

சிதம்பரா! புனித தொண்டை நாட்டில் திருப்போரூர் என்று ஒரு பதியுளது. அரிஷாதி தோஷப் பகைகளை அழிக்கும் அப்பதியில் உள்ள செவ்வேள் திருக்கோயிலை ஜீரணோத்தாரணம் செய்! அப்பெருமானைச் சேவிப்பார்க்கு எல்லாச் செல்வங்களும் எளிதின் எய்தும். தாமும் வாழ்ந்து மக்களையும் வாழ்விப்பதுதான் தவசிகள் தருமம் என்றார் குமார தேவர். அந்த அறிவிப்பு ஸ்ரீ மீனாட்சியிடமும் இருந்து பிறந்தது.

ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகள் புறப்பட்டார். திருப்போரூரை அணுகினார். அங்கு தியானத்தில் ஆழ்ந்தார். ஸ்ரீ தேவியாய், முருகனாய், குருநாதராய் மாறிமாறிக் காட்சி வழங்கிய சொரூப அனுபவத்தில் தோய்ந்தார். திருப்போரூர் சந்நிதி முறை பாடி, அப்பிரபந்த வழியே செவ்வேள் இறைவனைச் சிந்தித்தார். கல்லாம் மனத்தையும் கரையச் செய்யும் கலைக்கோயில் எழுப்பிய ஸ்வாமிகள், கந்தப் பெருமானுக்கு ஒரு கல்கோயிலையும் சமைத்தார். ஒரு வைகாசி விசாகத்

Koviloor Digital Library

தன்று, ஓம் சாந்தி சாந்தி சாந்தி: என்ற அமைதியுடன் எங்குமான வியாபகத்தில் இரண்டறக் கலந்து இன்பம் கண்டார்.

அற்புத சிற்பர ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகள்பால் அளவிறந்த அன்புடையவர் ஒரு அறிஞர். அவர், அவிநாசித் தலத்தை அண்மிய வேலம்பாளையம் உயர்திரு. கெ. விஸ்வநாத செட்டியார் எனும் பெயரினர். திரு ஆமாத்தூர் வண்ணச் சரபம் ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமிகளின் சிஷ்யப்ரசிஷ்யரும், பழனி ஸ்ரீ சாது ஸ்வாமிகளின் பாதசேகரரும், ஸ்ரீ பாம்பன் ஸ்வாமிகள் பால் பக்தி உடையவரும், எண்ணும் போதெல்லாம் தலவழிபாட்டில் ஈடுபாடு கொண்டு, ஒல்லும்அளவு திருப்பணிகளில் உணர்வு செலுத்துபவருமான பேரன்பர் இவர்கள், உள்ளத்தை உருக்கி உகந்ததை உதவும் ஸ்ரீ மீனாட்சி கலிவெண்பாவை, அன்பர்கட்கு அடக்க விலையில் பதித்து அளிக்கின்றார்.

அவர்கள் அன்பை அதிகம் அறிந்துள்ள அடியேன், பாராயணம் செய்வார்க்குப் பயனாகப் பதப்பிரிவும், குறித்த இடங்கட்கு மட்டும் குறிப்புரையும் ஓரளவு செய்துளன். இந்நூல் பெருக்கமான உரைபெற திருவருள்உதவும் காலம் நேருமேல், அன்பர்கள் ஆசி செய்ய இன்னும் சிறிது முயல்வன் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். உயர்ந்த தாளில் பரந்த மனத்தொடு இதைப் பதித்து வெளியிடும் அன்பர்க்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், பக்தியொடு இந்நூலைப் பாராயணம் செய்வார்க்கும்,

“அல்லல் வினையெல்லாம் அகற்றியே அஞ்சலென்று
நல்லசவு பாக்கியத்தை நல்கியே—வல்லபத்தின்

ஆசு மதுரம் சித்ர வித்தாரம் என்றறிஞர்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கும்—நேசமுடன்

Koviloor Digital Library

தந்து...ஆட்கொண்டு... அகத்தில் வந்திருந்து
புத்திமதி கொடுத்து— சந்ததமும்

நீயே துணையாகி நின்று ரட்சி! அங்கயற்கண்
தாயே சரணம் சரண் !'

எனும் ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகள் வளமான திருவாக்கையே கொண்டு வாழ்த்துகிறேன்.

வாழ்க அவர்கள் வளன் !

உய்க இந்த உலகம் !!

தேவி சகாயம் !!!
ஓம்

இங்ஙனம் :

6—6—'64.
சென்னை-21.

அன்பன்,

குகஸ்ரீ. ரஸபதி.

Koviloor Digital Library

உ
ஸ்ரீ தேவி சகாயம்

திருப்போரூர் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள்

அருளிய

ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா

காப்பு

அங்(கு) [1]அயற்கும், [2]மாற்கும் அரிய பெருமான் இடம்சேர்
அங்கயற்கண் அம்மைக்(கு) அணிபவே—அம் [3]கயத்தின்
மாமுகம்கொள் கோமானை வாழ்த்திக், கலிவெண்பா
நாம் [4]உகந்து பாடுவோம் நன்கு.

கலிவெண்பா

சீராரும் [5]பூங்கமலத் தெள்ளமுதே !சேயிழையே !
[6]காராரும் மேனிக் கருங்குயிலே!—ஆராயும்
வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே ! மின்ஒளியே !
ஆதி பராபரையே ! அம்பிகையே !—சோதியே !

---

1 அயற்கும் - பிரமனுக்கும். 2 மாற்கும் - திருமாலுக்கும்.
3 கயத்தின் மாமுகம் - யானைமுகம். 4 உகந்து - மகிழ்ந்து.
5 பூங்கமலம் - தாமரைமலர். 6 கார் ஆரும் - நிறை நீலமான.

Koviloor Digital Library

அண்டர்எல்லாம் போற்றும் அரும்பொருளே[1] ஆரணங்கே!
எண்திசைக்கும் தாயான ஈஸ்வரியே !—[2]தெண்திரையில்

வந்த அமுதே என்று, மாருமலே நினைப்பார்
சிந்தைதனிலே உறையும் செல்வியே ! — [3]அந்தம்இலா

மாயோன் தனக்(கு) [4]இளைய வல்லியே ! மாமயிலோன்
தாயே ! பராபரையே ! சங்கரியே—தூயஒளி

மன்னும் கைலாச மாமயிலே ! மேருஎனும்
[5] பொன்அம் கிரியுடைய பூங்கொடியே !—அன்னமே !

[6] அட்டகுல வெற்பாய் அமர்ந்தவளே ! [7]ஆதிஅந்தம்
[8]எட்டெட்டும் தாளுய் இருந்தவளே! [9]முட்டஎங்கும்

[10]அவ்எழுத்தாய் நின்ற அரும்பொருளே! ஆரணங்கே !
[11]உவ்எழுத்தாய் நின்ற(து)ஒரு உண்மையே–எவ்எழுத்தும்

தாளுகி நின்ற(து) ஒரு [12]தற்பரையே ! எவ்வுயிர்க்கும்
[13]ஊளுகி நின்ற(து) ஓர் உத்தமியே !—[14]கோளுய்ப்

படிஅளக்க [15]மால்பார் பதினன்கும், ஒக்க
அடியவரை ஈடேற்றும் அன்னய்!—முடி(வு) இலா

---

1 ஆர் அணங்கே - அரியதெய்வம் ஆனவளே. 2 தெண் திரையில் - தெளிந்த (அருட்) கடலில். 3 அந்தம் இலா - வரம்பிலா (பேனியுள்ள) 4 இளைய வல்லியே - இளைய தங்கையே. 5 பொன் அம் கிரி - பொன்மலை. 6 அட்டகுல வெற்பு - எட்டுத் திக்கு மலை. 7 ஆதி அந்தம் - முடிவும் முதலுமான. 8 எட்டெட்டும்-அறுபத்து நான்கு கலைகளும். 9 முட்ட - முழுதும். 10 அவ் எழுத்தாய் - அகர எழுத்தாகி. 11 உவ் எழுத்தாய் - உகர எழுத்தாகி. 12 தற்பரையே – தனக்குத் தானே தோன்றியவளே ! 13 ஊளுகி - உடம்பாகி. 14 கோளுய் - தலைவளுகி. 15 பார்

Koviloor Digital Library

ஓங்காரத்(து) உள்பொருளே! [1]உற்றநவ கோணத்தில்,
ரீங்காரம் தன்னில் இருப்பவளே! – பாங்(கு) ஆன

[2] முக்கோணத்(து) உள் இருக்கும்மூர்த்தியே! மூவிரண்டாம்
[3] சட்கோணத்(து) உள்ளிருக்கும் சத்தியே!—மிக்கபுகழ்

[4] எண்ணிரண்டாம் கோட்டில் இருப்பவளே! எவ்வுயிர்க்கும்
பண் இசைந்த பாட்டின் பழம்பொருளே!—விண்உலகின்

மேற்பட்(டு) அங்(கு) ஊடுருவி, மேலாகி நின்ற(து) ஓர்
நாற்பத்து முக்கோண நாயகியே!—சீர்பெற்ற

பஞ்சகோணத்து இருந்த பைங்கிளியே! பார்முழுதும்
[5] தஞ்சமது ஆகிநின்ற தையலே!— செம்சொல் மறை[6]

சொல்லே! பொருளே! சுவையே! [7]அறுசுவையே!
[8] எல்லாப் புவிக்கும் இறைவியே!—தொல்லை

[9] எறும்புகடை, யானைதலை, எண் இல் உயிர்க்கும்
உறும்பொருளாய், அங்கங்கு உணர்வாய்ப்,–பெறும்பயனாய்

பதினான்கும் மால் படியளக்க எனக் கூட்டுக. பார் பதினான்கு - மேலேழ், கீழேழ் உலகங்கள். மால் - திருமால்.

1 நவகோணம் - ஒன்பது கோணம். 2 முக்கோணம் – முக்கோண சக்கரம். 3 சட்கோணம் - ஆறு கோண சக்கரம். 4 எண்ணிரண்டாம் கோட்டில்-பதினாறுகோண சக்கரத்துள். 5 தஞ்சம் - அடைக்கலம். 6 மறைச் சொல்லே - வேத வாக்கினளே! 7 அறு சுவையே - கார்ப்பு, புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்புச் சுவைகளில் கலந்தவளே! 8 புவிக்கும் - உலகிற்கும். 9 யானை தலை எறும்புகடை - யானை முதல் எறும்பு ஈருக.

Koviloor Digital Library

[1] ஆருறு தத்துவமாய் [2]ஐயிரண்டு வாயுவாய்க்
[3] கூருய்த், [4]திசைபத்தின் கூட்டமாய்,—[5] பேறு ஆன
[6] அஞ்(சு) எழுத்தாய், [7]எட்(டு) எழுத்தாய், [8]ஐம்பத்தோர்
அக்கரமாய்ப்
[9] பஞ்சவர்னமாய்ப், [10]பஞ்ச தேவதையாய்—வஞ்சம்அற்ற
ஆ(று)[11]ஆதாரப் பொருளாய்,[12]ஐயைந்தாய், [13]ஐம்மூன்ருய்
[14]வீ(று) ஆன சக்கரத்தின் மின்ஒளியாய்க்,—கூறும்
[15]கருவி கரணுதிகளாய்க் கைகலந்து நின்ற
[16]பெரிய(து) ஒரு மாயைப் பிரிவாய்—உரிய(து) ஒரு

---

1 ஆருறு தத்துவம் - 36 தத்துவங்கள்; (சுத்த மாயையில் 5; அசுத்த மாயையில் 7; பிரகிருதி மாயையில் 24 என்க.)
2 ஐயிரண்டு வாயு-(பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனும்) பத்து வகைக் காற்றுகள். 3 கூருய் - (அவைகளின்) கூறுபாடுகளாய். 4 திசை பத்து - கிழக்கு தென் கிழக்கு, தெற்கு, தென் மேற்கு, மேற்கு, வட. மேற்கு, வடக்கு; வடகிழக்கு, ஆகாயம், பூமி. 5 பேறு-பயன். 6 அஞ்சு எழுத்தாய் - பஞ்சாட்சர ரூபமாய். 7 எட்டு எழுத்தாய் - அஷ்டாட்சர வடிவியாய். 8 ஐம்பத்தோர் அக்கரமாய் - ஐம்பத்தோர் எழுத்துக்களாய். 9 பஞ்சவர்னம்-ஐந்து நிறம். 10 பஞ்ச தேவதையாய்—ஐந்து சக்திகளாய். 11 ஆறு ஆதாரம் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை. 12 ஐயைந்தாய் - இருபத்தைந்து தத்துவ ரூபமாய். 13 ஐம் மூன்ருய் - மண், நீர், தீ, காற்று, விண், மதி, பரிதி, ஆன்மா எனும் அட்ட மூர்த்த வடிவமாய். 14 வீறு - பெருஞ் சிறப்புள்ள, 15 கருவி கரணுதிகள் - புலன்கள், பூதங்கள், பொறிகள், அந்தக்கரணங்கள்.
16 பெரியதொரு மாயை பிரிவு - சுத்தமாயை, அதன் பிரிவான அசுத்த, பிரகிருதி மாயைகள்.

Koviloor Digital Library

[1] சோத்திரத்தில் சத்தமாய்த், [2]தொக்கில் பரிசமாய்,
[3] நேத்திரத்தில் பேருருவாய், நீக்கம் இலா— [4]நாத்தலனின்

மெத்(து) இரதமாய், [5]மூக்கின் மேவுகந்தமாய்ப், பிறவாய்,
[6] மத்த, [7]பிரமத்த, [8]வயிரவியாய்ச்— [9]சுத்த

துரியமதாய்ப், பின்னும் துரி(ய) [10]அதீதத்தின்
அரிய சிலம்பொலியும் [11]ஆர்ப்பத்—[12]தெரி(வு) அரிதாய்

நாடுதனில் சென்(று)இரந்து, [13]நல்பவுரி கொண்டு, [14]தொந்தம்
ஆடுகின்ற பார்ப்பதியே! அம்பிகையே !—நாடிக்

களங்கம் அறவேதான், [15]கரும்புருவம் தன்னில்
பளிங்(கு) ஒளியாய் நின்ற பரமே!—வளம்பெறவே

கண் இரண்டின் உள்ளே கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்(று)அருளும் [16]பூவையே !—பண் அமைந்த

---

1 சோத்திரத்தில் சத்தமாய் - செவியில் ஒலியாய். 2 தொக்கில் பரிசமாய் - உடம்பில் உணர்வாய். 3 நேத்திரத்தில் பேருருவாய்—கண்ணில் ஒளியாய். 4 நாத்தலனில் மெத்து இரதமாய் - நாவிற் சுவையாய். 5 மூக்கில் மேவு கந்தமாய் - நாசியில் மணமாய். 6 மத்த - களித்தவளாய். 7 பிரமத்த - வெறித்தவளாய். 8 வயிரவியாய் - பைரவியாகி. 9 சுத்த துரியம் - (சாக்கிர சொப்பன சுழுத்தி கடந்த) தூய நான்காவது நிலை. 10 துரியாதீதம் - ஐந்தாவது நிலை. 11 ஆர்ப்ப - ஆரவார ஒலி எழுப்ப. 12 தெரிவு அரிதாய்-(எவரும்) அறிய இயலாதபடி. 13 பவுரி-இது ஒருவகை நடனம். 14 தொந்தம்- தொடர்பு கொண்டு. 15 கரும்புருவம் - கரியபுருவ நடு இடம். 16 பூவையே - மைனுப் பறவை போன்றவளே.

Koviloor Digital Library

நாசி நுனிமேல் நடுஎழுந்த தீபமாய்,
ஓசை [1]விந்து நாதாந்தத்(து) உள்பொருளாய்—நேசமுடன்

[2]அஞ்சு முகமாய், [3]அகண்ட பரிபூரணமாய்ப்,
பஞ்சபூதம் ஆன பைங்கிளியே'—கஞ்சமலர்ப்

பாதம் இரண்டாகிப், பச்சைநிறம் தான்ஆகி
ஆதிமுதல் ஆகிநின்ற [4]அம்பரமே!—தீ(து)இலா

நெற்றிதனில் கண்ணாகி, [5]நிட்கள ரூபப் பொருளாய்,
உற்றவெளி ஆகிநின்ற உத்தமியே!— [6]பத்திநிறை

ஆகாயத்தின் ஒளியாய் [7] அந்தரத்தின் ரூபமாய்
[8] மே(க)ஆதிக்(கு)உள்ளே விளைபொருளாய்-[9] வா(கு)ஆம்

இடைபிங் கலையாய், இரண்டுக்கும் எட்டாக்
[10]கடையும் சுழிமுனையாய்க், [11]காலாய்—[12]மடல்அவிழ்ந்த

[13]மூ(ல) ஆதாரத்து ஒளியாய், [14]மும்மண்டம் கடந்து
[15]மே(ல்)ஆதாரத்(து)இருந்தவெண்மதியாய்ப்-[16]பால்ஊறல்

---

1 விந்து - ஒளியின் தத்துவம். 2 அஞ்சுமுகம் - (ஈசான தற்புருட வாம அகோர சத்தியோஜாதம் ஆகிய) ஐந்து முகமாய். 3 அகண்ட பரிபூரணம் - எங்குமான நிறைவு. 4 அம்பரமே - ஆகாய வடிவியே. 5 நிட்களம் - களங்கம் இல்லாத. 6 பத்திநிரை - (தூல, சூக்கும, குண, கஞ்சுக, காரண, பிரணவ) வரிசை முறையான. 7 அந்தர ரூபம் - அதிரகஸ்ய ஆகாயத் திருமேனி. 8 மேக ஆதிக்கு - முதன்மை மேகங்களுக்கு. 9 வாகு ஆம் - அழகான.
10 கடையும் சுழுமுனை - இது ஒரு நாடி. 11 காலாய் - உச்சுவாச நிச்சுவாசமாகி. 12 மடல் அவிழ்ந்த-இதழ்கள் மலர்ந்த.
13 மூல ஆதாரம் - ஆதாரங்கள் அனைத்திற்கும் மூலம்.
14 மும்மண்டலம் - சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்கள்.
15 மேல் ஆதாரம் - இது உச்சிக்கு மேல் வைத்து எண்ணப் பெறுவது. 16 பால் ஊறல் - ஊற்றெடுத்த அமுதம்.

Koviloor Digital Library

உண்ணும் சிவயோக உத்தமியே ! மெய்த்தவமே !
பண்ணுமறை வேதப் பழம்பொருளே !—எண்ணரிய

மெய்ஞ்ஞான வித்தே ! விளக்(கு)ஒளியே ! – மெய்ச்சுடரே
அஞ்ஞானமே அகற்றும் அம்மையே !— [1]பைங்நாகம்

பூண்ட சிவனுர் இடத்துப் பூங்கொடியே ! [2]பாங்குடனே
தாண்டவம் ஆடப், [3]பவுரி தாளம்ஒத்தி— [4]ஆண்டியுடன்

ஆடும் கூத்தாடிச்சி, [5]அம்மனேப் பந்தாடிச்சி,
தேடியும் மால்காணுச் சிவசத்தி—நாடிஉனேப்

போற்றும் அடியார்கள் வினேபோக்கியே, அஞ்சல் என்று
தோற்றுகின்ற அம்மை, [6]துடி இடைச்சி,— [7]ஏத்(து) அரிய

பச்சை நிறத்தி, பவளக் [8]கொடி இடைச்சி,
[9]கச்சைப் பொருமுலேச்சி, [10]கைவளேச்சி—[11]கொச்சை

மலேயரையன் பெற்ற [12]மலேச்சி, [13]கலேச்சி,
நிலேயறி [14]வேதாந்த நிலேச்சி – அலேயாத

---

1 பைங்நாகம் - படமெடுக்கும் பாம்புகள். 2 பாங்கு - தகுதி. 3 பவுரி தாண்டவம் எனக் கூட்டுக. 4 ஆண்டி - சிவபிரான். 5 அம்மனே பந்தாடிச்சி – அம்மனேயும் பந்தும் ஆடுபவளே. 6 துடி இடைச்சி - உடுக்கை போலும் இடையை உடையவளே. 7 ஏத்து அரிய-ஓத இயலாத. 8 கொடி இடைச்சி - பூங்கொடி போல் துவளும் இடையினே யுடையவளே. 9 கச்சைப் பொரும் - இரவிக்கையை முட்டுகின்ற. 10 கை. வளேச்சி – கையில் என்றும் வளேயல் உள்ள மங்கலேயே. 11 கொச்சை - மழலே மொழி. 12 மலேச்சி - பார்வதியே. 13 கலேச்சி - மேகலே யணிந்தவளே. 14 வேதாந்த நிலேச்சி – உபநிஷத்துக்களில் நிலேயாக உறைபவளே.

Koviloor Digital Library

அன்ன நடைச்சி, [1]அருமறைச்சி, ஆண்டிச்சி,
[2]கன்னல் மொழிச்சி, கருணைச்சி--பன்னுதமிழ்

வாய்ச்சி, சடைச்சி, வடிவுடைய மங்கைச்சி,
பேய்ச்சி, இளமுலைச்சி, பேதைச்சி—காய்ச்சியபால்

வெண்ணெய் மொழிச்சி, [3]வெளிச்சி, [4]வெளிஇடைச்சி,
[5]அண்ணுபுரம் தீயிட்ட [6]அம்படைச்சி—நண்ணிலரும்

கொப்புக் குழைச்சி, [7]குவளை பொருவிழிச்சி
[8]அப்புச் சடைச்சி, சி(வ) ஆகமச்சி—மெய்ப்பாம்

[9]கருப்புச் சிலைச்சி, [10]கலைச்சி, [11]வலைச்சி,
[12]மருப்புத் தனத்தி, மவுனத்தி –[13]பொருப்(பு)இடத்தி,

---

1 அரு மறைச்சி - வேத நாயகி. 2 கன்னல் மொழிச்சி - கரும்புபோல் இனிக்கும் மொழியினளே. 3 வெளிச்சி - வெட்ட வெளியில் இருப்பவளே. 4 வெளி இடைச்சி - ஆகாயம் போல் இடையே தோன்றுது இருப்பவளே.
5 அண்ணுபுரம் - (அழிவு செய) அணுகி வந்த முப்புரம்.
6 அம்படைச்சி - அழகிய (புன்னகையாம்) ஆயுதங் கொண்டவளே; (அழகிய ஆசாரிய வடிவம் ஆனவளே). 7 குவளை பொருவிழிச்சி - குவளை மலரை வென்ற கண்ணினளே.
8 அப்புச் சடைச்சி - கங்கை தாங்கிய சடையினளே.
9 கருப்புச் சிலைச்சி - கரும்பு வில்லை யுடையவளே.
10 கலைச்சி - (64) கலைமயம் ஆனவளே. 11 வலைச்சி - செம்படவர் குலத்தில் உதித்தவளே; (வரலாற்றைத் திருவிளையாடல் புராணத்தில் அறிக.) 12 மருப்புத் தனத்தி - யானைத் தந்தம் போன்றுள்ள தனங்களை யுடையவளே.
13 பொருப்பு - மலைகள்.

Koviloor Digital Library

[1] தாமப் புயத்தி, [2]சமர்த்தி, தருமத்தி,
நாமச் சிவபுரத்தி, நாரணத்தி— [3]தேமருவும்

காரணத்தி, பூத கணத்தி, [4]தனபார
வாரணத்தி, அட்ட திக்கு [5]மாரணத்தி – பூரணத்தி

[6]பாத பரிபுரத்தி, பங்கயத்தி, செங்கரத்தி,
சோதி மணிநிறத்தி, [7]சொப்பனத்தி—பாதிமதி

சூடுகின்ற சொக்கருடன் துய்யபுலித் தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்கும் காரணியே!—நாடறியும்

[8]சேணிச்சி, நல்ல சிறுத்தொண்டன் பிள்ளை அறுத்(து)
[9]ஊணிச்சி, நஞ்(சு) அமுதாம் ஊணிச்சி—[10]பாணிச்சி,

[11]பா(ச) அங்குசத்தி, [12]பரத்தி, பருப்பதத்தி,
காசாம்பூ மேனிக் கனதனத்தி—[13]மா(சு)இலா

அம்பரத்தி, ஐம்புலத்தி, ஆன(து) ஒரு வேதாந்த
உம்பருக்கும் எட்டாத உத்தமத்தி—செம்பொன்வளைச்

---

1 தாமப் புயத்தி - மாலையணி தோளினளே. 2 சமர்த்தி - சாமர்த்தியம் உடையவளே. 3 தே - தெய்வீகம்.
4 தனபார வாரணத்தி - குயங்களை யுடைய பெண் யானை போல்பவளே. 5 மாரணத்தி - விடுதலை யளிப்பவளே.
6 பாத பரிபுரத்தி-திருவடிச் சிலம்பினளே. 7 சொப்பனத்தி- கனவில் வருபவளே. 8 சேணிச்சி - எட்டாத தூரத்தில் இருப்பவளே. 9 ஊணிச்சி - உணவாகக் கொண்டவளே.
10 பாணிச்சி-(தெய்வப்பணி செய்யும்) திருக்கரத்தை உடையவளே. 11 பாச அங்குசத்தி - பாசம் எனும் கயிறும், அங்குசம் எனும் ஆயுதமும் ஏந்தியவளே. 12 பரத்தி - பரப்பிரஹ்ம சொரூபம் ஆனவளே. 13 மாசிலா அம்பரத்தி - ஞானகாய வடிவி ; அல்லது களங்கமற்ற ஆடையளே.

Koviloor Digital Library

[1]செட்டிச்சி, வைகைதனில் சென்றுவெட்டி மண்சுமந்த
[2]ஒட்டச்சி, [3]பூதிஅணி உத்தளத்தி— அட்டதிக்கு

மின்னே! விளக்கே! விலையில்லா சீவரத்தினப்
பொன்னே! நவமணியே! பூங்கிளியே—இன்னமுதே!

மாணிக்க வல்லியே! மாமரகதப் பணியே!
ஆணிக் கனகத்(து) அரும்பொருளே! – [4]மாண்உற்ற

சிங்கார வல்லியே! [5]செம்பொன் சிலைவளைத்த
[6]கங்காளற்(கு) அன்பான கண்மணியே!—மங்காத

தெய்வக் குலக்கொழுந்தே! செம்பட்(டு)உடைத் திருவே!
[7]ஐவருக்கும் தாயாய் அமர்ந்தவளே!—மெய்யருக்குச்

சித்தி கொடுக்கும் சிவானந்தி! அன்பருக்கு
முத்தி கொடுக்கும் ஞான மூர்த்தியே! – எத்திசைக்கும்

தாயகமாய்ச் சூழ் [8]தாவர [9]சங்கமம் விளக்கும்
தூய[10]சுடர் மூன்றான சூக்குமமே!—[11]வேய்ஈன்ற

---

1 வளை செட்டிச்சி - வளையல் விற்கும் வணிககுல மகள்; (திருவிளையாடல் புராணம் வளையல் விற்ற படலம் காண்க.) 2 ஒட்டச்சி - ஒட்டர் குலத்து உதித்தவள்; (திருவிளையாடல் மண் சுமந்த படலம் காண்க.) 3 பூதியணி உத்தளத்தி - விபூதியை உத்தூளமாக அணிந்தவளே! (இது நீரில் குழைக்காமல் பூசும் நிலை.) 4 மாண் - மிகு சிறப்பு. 5 செம்பொன் சிலை - (மேருவாம்) பொன்மலையை வில்லாக. 6 கங்காளர் - எலும்பணி சிவபிரான். 7 ஐவர் - பிரமன், திருமால், உருத்திரர், மகேசர், சதாசிவர் என்பவர். 8 தாவரம் - இயங்காத செடி, கொடி யாதியவை. 9 சங்கமம்-இயங்கும் இனங்கள். 10 சுடர் மூன்று-சந்திர, சூரிய, அக்கினி. 11 வேய்-மூங்கில்.

Koviloor Digital Library

[1]நித்திலமே! கற்பகமே! நின்மலமே! நன்மணியே!
சுத்தபரி பூரணியே! சுந்தரியே!— [2]அத்தருடன்

வாதாடும் மங்கையே! மாமந்த்ர ரூபியே!
வேதாந்தியே! கமல மெல்லியலே!—நாதாந்த

மாயேஸ் வரியே! மங்கையே! மாமறைக்கும்
தாயாகி நின்ற சரஸ்வதியே!—காயாய்ப்

பழுத்த பழமாய்ப், பழுத்(து)ரசம் தானாய்,
முழுத்த [3]பர ஆநந்த முதலாய்—எழுத்துமுதல்

ஆறு சமயங்களுக்குள், அவ்வவர்க்கும் வெவ்வேறாய்
வேறுபல ரூப [4]விகற்ப மதாய்க்—கூ(ற)அரிதாய்

அங்கங்கும் தானாய் அமர்ந்தவளே! ஆதி அந்தம்
எங்கெங்கும் தானாய் இருந்தவளே!— [5]திங்கள் நுதல்

அம்சுகமே! தேனே! அணங்கே! அமுதமொழிக்
[6]கிஞ்சுகமே! [7]பிஞ்சுமதிக் கிள்ளையே!—கொஞ்சுகுயில்

கன்னி, திரிசூலி, கபாலி, சிவகாமி,
மன்னுகவுரி, மகமாயி—பொன்னின்மலர்த்

[8]தாளி, [9]சதுரி, சவுந்தரி, முக்கண்ணுடைய
காளி, பகவதி, [10]கங்காளி—[11]தூளியாத்

---

1 நித்திலம் – முத்து. 2 அத்தருடன் - சிவபிரானுடன்.
3 பராநந்தம் - சிவாநந்தம். 4 விகற்பம் - வேறுபாடு.
5 திங்கள் நுதல் அம்சுகமே - எட்டாம் பிறைபோன்ற நெற்றியுடைய அழகிய கிளியே! 6 கிஞ்சுகம் - கொவ்வைப்பழம் போலும் திருவாயினளே. 7 பிஞ்சு மதி - இளந்திங்கள்.
8 தாளி - திருவடிகளை யுடையவளே. 9 சதுரி - மேம்பாடுடையவளே. 10 கங்காளி - எலும்பு மாலையளே.
11 தூளியா - பொடியாகும்படி.

Koviloor Digital Library

தக்கன் தலையறுத்த தத்துவத்தி [1]தற்பரத்தி,
அக்கினிகை [2]ஈர்ந்த அமர்க்களத்தி—மிக்கபுகழ்

வீரசத்தி, மேருவினை வில்லா வளைத்த ஒரு
பாரசத்தி, வேதப் பராசத்தி— [3]தாரணிகள்

[4] கொண்டகார் இச்சிக்கும் [5]குந்தளத்தி, [6]மாமதனன்
சண்டை காரிச்சி, [7]சகளத்தி,— [8]துண்டமதிச்

செஞ்சடைச்சி, [9]கஞ்சுளிச்சி, [10]செம்படத்தி, கங்கணத்தி,
[11]பஞ்சசத்தி, [12]கொந்தளத்தி, [13]பைம்பணத்தி—
[14]அஞ்சனத்தி,

முத்துவடக் கொங்கைச்சி, முல்லை மகிழ்நகைச்சி,
பத்தரவர் நெஞ்சகத்தி, [15]பார்இடத்தி,—சுத்தவெள்ளை

[16]அக்கு வடத்தி, அறம்வளர்த்தி, அன்புடைச்சி,
செக்கர் இளம்பிறைச்சி, செண்பகத்தி—தக்கமணி

---

1 தற்பரத்தி - தன்னில் தோன்றித் தானே ஆனவள்.
2 ஈர்ந்த - அறுத்த. 3 தாரணிகள் - உலகங்கள்.
4 கொண்ட கார் - விரும்பிய மேகங்கள். 5 குந்தளத்தி - கரிய கூந்தலை உடையவளே. 6 மாமதனன் :சண்டை காரிச்சி - மதன சண்டை இடுபவள் என்பது குறிப்பு; அதாவது காமரூபிணி என்றபடி. 7 சகளத்தி . நினைத்த உருவம் கொள்பவள். 8 துண்டமதி - பிறைமதி யணிந்த. 9 கஞ்சுளிச்சி - (பல நிற) ஆடையுடையள். 10 செம்படத்தி – செம்படவர் மகளே. 11 பஞ்சசத்தி - கலைமகள், திருமகள், மலைமகள், மகேசை மனோன்மணி யாதியர். 12 கொந்தளத்தி - கூந்தலை யுடையவள். 13 பைம்பணத்தி - அழகிய பையை ஏந்தியவள்; அல்லது பணப்பையை உடையவள்.
14 அஞ்சனத்தி-மை தீட்டிய கண்ணினள். 15 பார் இடத்தி- உலகைக் கோயிலாக உடையவள். 16 அக்கு வடத்தி - ஜெபமாலையள்.

Koviloor Digital Library

ஓலைக் குழைச்சி, உபதேசக் குண்டலச்சி,
மாலைக் கழுத்தி, மவுனத்தி—ஞாலமெலாம்

[1]அக்கரத்தி, [2]பொக்கணத்தி, அண்டபகிர் அண்டத்தி,
முக்கணத்தி, [3]நிஷ்களத்தி, மோட்சத்தி—மிக்க [4]புகழ்

ஏகாக்கரத்தி, இமயப் பருப்பதத்தி,
[5]நாகாதி பூண்ட சிங்க நாதத்தி—வா(கு) ஆன

பத்(ம) ஆசனத்தி, பரிமளத்தி, பாம்(பு) அணைத்தி,
கல் (ப) அந்தரத்தி, கருநிறத்தி—வில்காம

வேடிச்சி, நல்ல(து) ஒரு மீனவனுக்(கு) அன்று முடி 80
சூடிச்சி, கொக்கிறகு சூடிச்சி—நாடிச்சீர்

பாதந்தனைத் தேடும் பங்கயத்தில் வீற்றிருக்கும்
[6]வேதன் தலையறுத்த வித்தகத்தி—நீதிபுனை

பாடகத்தி, கீதப்ர பந்தத்தி, வெள்ளி மன்றுள்
ஆடகத்தி, கூடலுக்குள் ஆதியே!—ஏ(டு) எதிரே

ஏற்றுவித்து, முன் சமணர் எண்ணாயிரர் கழுவில்
வீற்றிருக்க வைத்தமறை வித்தகியே!—நால்திசையும்

கொண்டாடப் பெற்றதொரு கோமளமே! யாமளையே!
தண்தாமரைத் திருவே! தையலே!—மண்டலங்கள்

அக்கரத்தி - எழுத்து வடிவானவள். 2 பொக்கணத்தி – விபூதிப் பையைக் கொண்டவள். 3 நிஷ்களத்தி - களங்கம் இல்லாதவள். 4 புகழ் ஏகாக்கரத்தி - புகழ்ச்சிக்கு உரிய ஓரெழுத்தில் இருப்பவள்; மற்று, புகழ் நீங்காத திருக்கரத்தினள். 5 நாகாதி – பாம்பு முதலான பல ஆபரணங்கள். 6 கல்ப அந்தரத்தி-யுக இறுதியில் இருப்பவள். 6 வேதன் - பிரமன்.

Koviloor Digital Library

எங்கும் ஒத்து நின்றருளும் ஈஸ்வரியே ! மாமதுரை 85
அம்கயல் கண் நாயகியே ! அம்மையே!—துங்க

ஒளியே ! பெரும்திருவே ! [1]ஓதிமமே ! உண்மை
வெளியே ! பரப்பிரம வித்தே!— [2]அளி சேரும்

[3]கொந்தளகப் பந்திக் குயிலே! சிவயோகத்(து)
ஐந்தருவே ! மூவருக்கும் அன்னையே !—எந்தம் இடர்

அல்லல் வினைஎலாம் அகற்றியே, அஞ்சல் என்று
நல்ல சவுபாக்கியத்தை நல்கியே—வல்லபத்தின்

ஆசு, மதுரம், சித்ர, வித்தாரம் என்று அறிஞர்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கு—நேசமுடன்

தந்(து)என்னை ஆட்கொண்டு, சற்குருவாய் என் அகத்தில்
வந்(து) இருந்து, புத்தி மதிகொடுத்துச்,— சந்ததமும்

நீயே துணையாகி நின்(று) இரட்சி! அம் கயல்கண்
தாயே ! சரணம் சரண் !

ஸ்ரீ மீனுட்சியம்மை கலிவெண்பா

நிறைவு பெற்றது

---

1 ஓதிமமே - அன்னமே. 2 அளி - வண்டுகள்.
3 கொந்தளக பந்தி - அடர்ந்த கூந்தல்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Jyothi Printers Madras-1